# SLITA

## இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம்
### கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

# வெற்றிடம்

இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகமானது புடவை மற்றும் ஆடை தொழில்துறைக்காக பயிற்சி அளித்தல், ஆலோசனை சேவை, ஆய்வுகூட செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப சேவை வழங்கும் அரசின் சட்டரீதியான சபை என்பதோடு அதில் தற்போது பின்வரும் வெற்றிடம் ஒன்று உள்ளது.

**தலைமை தொழில்நுட்பவியலாளர் - 01 (HM 1 – 1)**

**தகைமை மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி அபேட்சகர்கள்:**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட புடவை மற்றும்/ அல்லது ஆடை அல்லது விஞ்ஞானம் அல்லது முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம்.

**அல்லது**

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து இணை அங்கத்துவம்.

**அத்துடன்**

தொடர்புடைய துறையில் பட்டப்பின் படிப்பு தகைமை (முதுமாணி).

**மற்றும்**

கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ தரத்தில் பன்னிரெண்டு (12) ஆண்டுகள் அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்கள்: (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
2. இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகத்தில் முகாமைத்துவப் பிரிவு (MM 1-1) தரம் 1 சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர் பதவி ஒன்றில் குறைந்தது இரண்டு (02) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது :** 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு:** ***HM 1 – 1 – 2025:*** ரூபா 140,640 /- 4,100 x 15 – 202,140/- (01/2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின் அட்டவணை II இன்படி, 2026 ஆம் ஆண்டுக்கான உங்களது அடிப்படை மாதாந்த சம்பளம் ரூபா 123,019/- என்பதோடு அரசு அங்கீகரித்த சட்டரீதியான கொடுப்பனவுகள் சேர்க்கப்படும்.)

**மற்றவை**

i. இலங்கை பிரஜை ஒருவராக இருத்தல் வேண்டும்.
ii. பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கும் நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

மேல் குறிப்பிடப்பட்ட பதவிக்கு தொடர்புடைய தகைமை, அனுபவம் மற்றும் தொழில் சார்ந்த வேறு தகைமைகளை (உறுதி செய்வதற்கு குறித்த ஆவணங்களின் பிரதிகள் தேவை) மற்றும் சுயவிபரக்கோவை அடங்கிய முறையாக பூர்த்தி செய்யப்பட்ட உங்களது விண்ணப்பப் படிவத்தை 2026.03.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்துக்கு, உறவினர் அல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயருடன் (non-related referees), கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பதவியை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (நேர்முகப் பரீட்சைக்கு பொருத்தமான விண்ணப்பங்கள் மாத்திரம் அழைக்கப்படுவதோடு, இறுதி முடிவு நிர்வாகக் குழு வசமானது.)

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம்**
**கந்தவல தோட்டம், இலக்கம் 02, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இரத்மலானை.**
**தொ. இலக்கம்: 011 2632406 இணையதளம்: www.slita.lk**